

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 05.01.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்













# இந்திய நிகழ்வுகள்

- **விபத்து இல்லாத இரயில் பயணத்தை இலக்காகக்** கொண்டு **Mission Zero Accident** என்ற திட்டத்தை இந்திய இரயில்வே செயல்படுத்தி வருகிறது.
  - 2020-க்குள் ஆளில்லா இரயில்வே, கிராசிங்குகளே நீக்குதல், இரயில் மோதலை தவிர்க்கும் முறை **(Train Collision Avoidance System)** ஆகியவை இதில் அடங்கும்.

- 18 முதல் 30 வயதிற்குள் இறக்கும் விவசாயிகளின் குடும்பத்திற்கு **2 இலட்சம் நிதியுதவி** அளிப்பதற்காக **மேற்கு வங்காள** அரசானது **கிரிஷக் பந்து திட்டம் (Krishak Bandhu Scheme)** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- **இந்திய மருந்து மற்றும் மருத்துவ மாநாடு – 2019,** கர்நாடகத்தின் **பெங்களூரில்** நடைபெற்றது. **(India Pharma – 2019)** இம்மாநாடு இரசாயணம் மற்றும் உரங்கள் அமைச்சகம் சார்பில் நடத்தப்பட்டது.
  - இம்மாநாட்டின் மையக்கருத்து – **"Enabling Quality Affordable Health Care"**

# உலக நிகழ்வுகள்

- அண்டார்டிகாவின் உயர்ந்த சிகரமான **"வின்சன் சிகரத்தை"** ஏறிய முதல் மாற்றுத்திறனாளி பெண் என்ற பெருமையை **அருணிமா சின்ஹா (Arunima Sinha)** என்பவர் பெற்றுள்ளார்.
  - இவர் உத்திரப் பிரதேசத்தை சேர்ந்தவர், **எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் மாற்றுத் திறனாளி பெண்ணும் இவரே** ஆவார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- நிலவின் இருண்ட பகுதியை ஆராயும் செயற்கை கோளான **சாங் இ - 4 (Chang e – 4)** என்னும் செயற்கைகோள், **ஜனவரி 3, 2019** அன்று வெற்றிகரமாக **நிலவில் தரையிரங்கியது.**
  - இச்செயற்கைகோளை சீனா **டிசம்பர் 8, 2018ல்** விண்ணில்



We Shine Academy TM

செலுத்தியது.

- குறிப்பு:
  - **நிலவில் இருண்ட பகுதியை புகைப்படம்** எடுத்த **முதல் செயற்கை கோள் - லூனா – 3 (Luna – 3)** ஆகும்.

- சூரியனை மிகவும் நீண்ட தொலைவில் சுற்றி வரும் **“அல்ட்டிமா துலே (Ultima Thule)** என்ற நுண்கோளின் அருகே சென்று, அமெரிக்காவின் **“நியூ ஹொரைஸன்”** என்ற விண்கலம் சாதனைப் படைத்துள்ளது.

## நியமனங்கள்

- **இந்தியாவின், போட்டி ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளராக பி.கே.சிங்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - போட்டி ஒழுங்குமுறை ஆணையம் (**Competition Commission of India)** 2003, **அக்டோபர்** 14-ல் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவர் - **அசோக் குமார்** ஆவார்.

## முக்கிய தினங்கள்

- **உலக பிரெய்லி தினம் - ஜனவரி 4**
  - கண்பார்வையற்றவர்கள் படிப்பதற்காக **பிரெய்லி என்ற மென்பொருளை** கண்டுபிடித்த **“லூயிஸ் பிரெய்லி”** என்பவரின் **பிறந்த நாளை நினைவு கூறுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4** அன்று உலக பிரெய்லி தினமாக கொண்டாடப்படுகிறது.